# THE MORNING STAR.

Vol. 61. Jaffna, Thursday 24th of Jan. 1901. No. 2.


RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.


## OUR SUBSCRIBERS.

### Please remit your Subscriptions for Star at once.

*RECEIPTS FOR THE MORNING STAR.*
1900

| | | | |
|---|---|---|---|
| Colombo | Mr. P. Mortimer | 1898—1901 | 8.00 |
| Dickoya | " N. Nannitamby | 1900 | 2 00 |
| Keygalle | " A. L. Abdul Rahim | 1900 | 1.00 |
| Straits Settlements | Messrs. J. A. Chinniah 7.00, Govindapillai 3.00. S. Canapathipillai | | 12.25 |
| Jaffna | Messrs S. Satasivam 3 00, P. Rasakopal 1.50, V. Supramanium 1 50, | | 6.00 |


THE CEYLON STEAMSHIP Co. Ltd.



The Lady Gordon and Aska are appointed to sail from Mandative for Colombo on the undermentioned dates:—

Via Paumban.

Lady Gordon, sails on 19th Jan. 1901
" " 30th Jan. 1901

Via Point Pedro.

S. S. Aska sails on 18th Jan. 1901
" 1st Feb. "

W. MATHER & SON, Agents


NOTICE.

TO ALL THOSE WHOM IT MAY CONCERN:

Notice is hereby given that I have this day cancelled the Power of Attorney given by me to my uncle Venasitamby Kandapillai of Neeraviady Vannarponne West now residing at Batticotta west and therefore no receipt discharges or acquittances signed by him for me and in my behalf will be accepted by me as valid

KualaLumpor } Signed S. Visuvanathan
15th Dec 1900 { Head Overseer

NOTICE

Notice is hereby given that a Public Meeting of such inhabitants of Jaffna as are qualified to vote under the Municipal Council's Ordinance, will be held at the District Court Jaffna, on Saturday the 2nd February 1901 at 2 30 P.M. to consider the proposal regarding the establishment of a Municipality for Jaffna.

Jaffna Kachcheri } W. H. B CARBERY
16th Jan 1901 } Secy., Board of Health.


NOTICE.

Our store has been admitted by all our Constituents to be the best in Jaffna for

**Fresh and Genuine Articles**

We do not care to stock cheap or old Oilmanstores and thereby bring discredit to our Firm although many in Jaffna wish for such articles.

We receive fresh supplies by every Steamer.

**N.B. Cheap articles can never be good.**

Alexander Brothers & Co.
JAFFNA.


ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1122.

In the matter of the estate of the late Rasammah wife of Chinnappu Thamotharampillai of Chandilipay Deceased.

Sapapaahy Ponnampalam of Chundilipay. Petitioner
Chinnappu Thamotharampillai of do. Respondent.

This Matter of the Petition of Sapapathy Ponnampalam of Chandilipay praying for letters of Administration to the estate of the abovenamed deceased Rasammah wife of Chinnappu Thamotharampillai coming on for disposal before W. R. B. Sanders Esquire, District Judge, on the 8th day of January 1901 in the presence of Mr. Tambiah S. Cooke, Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 3rd day of January 1901 having been read, it is declared that the Petitioner is the father and next of kin of the said intestate and is entitled to have letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondent or any other person shall on or before the 14th day of February 1901 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 8th day of Jan, 1901 | W. R. B. SANDERS. District Judge.

ORDER NISI

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction. | No. 1125.

In the matter of the estate of the late Akilanda Espanammah widow of Neelakandakurukkal of Neervaly, Decea.

Santhirasekarakurukkal Supramaniakurukkal of Neervaly Petitioner

Somasuntharakurukkal Santhirasekarakurukkal of Neervaly. Respondent.

This matter of the Petition of Santhirasekarakurukkal Supramaniakurukkal of Neervaly praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Akilanda Espanammah widow of Nakentirakurukkal coming on for disposal before W. R. B Sanders Esquire, District Judge, on the 16th day of January 1901 in the presence of Mr. Tambiah S. Cooke, Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 11th day of January 1901 having been read, it is declared that the Petitioner is the nephew and next of kin of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondent or any other person shall on or, before the 15th day of February 1901 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 16th day of Jan. 1901 | W. R. B. SANDERS. District Judge.

## Local & General.

**Weather.** Showers have been prevalent in many parts of the peninsula, though decidedly local. Over 3 inches of rainfall was reported in one place within a few hours while less than 5 miles distant there was only about one tenth of this amount. Heavy dews have been very general. Fever, measles and chicken pox prevail in some localities, but the mortality is not high.

**Personal.** Miss Slaughter M. D. of America a friend of Dr. Young's. is visiting her at Inuvil for a few months. She has been visiting places of interest in India and was greatly pleased with all she saw. We hope see will be equally pleased with the work in Jaffna. Mr. J. K. Sinnatamby of the Tondy mission is expected this week for a fortnight's visit with his family. Proctor Hemphil of Mannar is visiting his friends in Jaffna.

**American battleship.** The Kentucky, one of the most powerful battleships of the American navy called at Colombo on her way to Manila a few days ago. She carries 50 guns and 4 torpedo tubes, is of 11,500 tons displacement and carries besides the 32 officers and usual crew, 60 marines and 540 fighting men. She is on her first trip having been completed only about a year ago.

**Boers in Jaffna.** It is said that Government has withdrawn its intention of sending up several hundred Boers to Jaffna. We hope this rumour is true, for it would have been a real hardship for those now living in the Fort to vacate and find houses in town. In fact there are practically no houses to let in the town. Moreover it would have been difficult to arrange for the food supply of so many prisoners.

**Leaves! Leaves!** Men are busy stripping margosa and tulip trees of their leaves to use as fertilizers for tobacco gardens. It is said that the trees are not injured by the severe pruning they receive but we should be glad to hear the report of some expert on the subject. If trees are being injured by this wholesale cutting, the Government ought to step in and forbid it, or in a few years it will be difficult to find tulip and margosa timber. The price of margosa planks has already gone up considerably during the past few years.

**Dr. Barnardo's Home.** We have been requested to publish the following:—

"In the December issue of the "National Waifs' Magazine" Dr. Barnardo devotes a good deal of space to a most interesting record of his recent tour in Canada. Out of the 11,591 emigrants sent to Canada and the Colonies under the auspices of the National Waifs' Association, it is claimed that less than two in a hundred have failed, while very many have succeeded to an extent that a few short years ago would have seemed beyond the wildest dreams of the young people themselves. The general contents of the magazine make special appeal at this Christmas season to all who are in sympathy with skilful rescue-work carefully carried on."

**Municipality in Jaffna.** Among other matters voted at a late meeting of the Local Board the following resolution was passed.

No. 2. The Board considered the memo: of the Government Agent on the needs of Jaffna and sanitary requirements. Resolved that, in the opinion of this Board, it is desirable to convene a public meeting of such inhabitants of Jaffna, as are qualified to vote under the Municipal Council's Ordinance, to consider the question of establishing a Municipality for Jaffna as the Board is unable in its present financial state to meet the ever increasing cry for sanitation from the growing population of various parts of the division.

**Jaffna Railway.** Mr. Oliver the chief Engineer paid a visit to Jaffna on the 17th inst. inspected the work for two days and returned to Colombo by land on the 19th inst. The S. S. "Vita" brought on the 19th inst. "Cylinder Segments" for the Uppar bridge which were landed at Jaffna. The rails have been laid from Kangesanturai up to Tellipallai and goods and materials for the work are removed from Kangesanturai by trolly. The "30 foot bridge" at Tellipallai is being constructed. The District store at Chavagacheri has been completed and the one at Pallai is in course of construction. The station buildings at Chavagacheri and Chunnagam are in course of construction. Com.

**Obituary.** Mr. Robert Hoisington, son of Rev. H. Hoisington, died at his home in Myleddi on Tuesday the 22nd before day-break. He was the University scholar from Singapore and had finished his classical course and was engaged in the study of medicine when he was taken sick with pulmonary disease and was ordered home. The Government sent him in charge of a trained nurse paying all his expenses, and hoping that the milder air of Ceylon would soon restore him to health. But the disease made rapid progress and though every thing was done that could be done, he failed rapidly and finally passed away an hour or two after midnight of the 21st. His friends and relatives have our very hearty and sincere sympathy.

**Day of Prayer.** The General Committee of the World's Student Christian Federation at their meeting held in Versailles, France, in August, 1900, appointed Sunday, Feb. 10th 1901 as the Universal Day of Prayer for students.

**Wesleyan Mission.** The Synod for this year of the Northern circuit of the Wesleyan Mission was postponed on account of sickness in town until next week.

**Royal Visit.** The Duke and Duchess of York will visit Ceylon on their way to Australia at the end of March next. And they will remain in the Colony for two days.

**Tamil Dictionary.** This elaborate work prepared by Mr. C. W. Catheravalupillai has almost been completed and the manuscript copy is ready to be passed over to the printers.

**The Supreme Court.** The first session for the year at Jaffna will be held on the 18th day of February 1901. It is said that there are several important cases for trial.

**The Govt Agent.** During the past and this week Mr. Levers was engaged in filling vacancies among minor Headmen, and in exempting old and infirm men from the payment of the road tax. He was at Pt. Pedro with his second Interpreter Mr. S. Sabaretnam on the 12th inst. He proceeded to Delft and returned to Jaffna to attend to exemption work at Changanai on the 23rd inst. at Puttoor he will be on the 25th inst.

**The Census of 1901.** The preliminary census will be taken on the 4th Feb. and the regular census will be taken on the night of the 1st March. All houses and dwelling places have been duly numbered for the purpose. On the 2nd of March every commissioner of the census is expected to telegraph to head quarters the total number of houses, males and females in his district, so that Provincial totals may be transmitted to the Government on or before the 6th March for publication in the Govt. Gazette on the 8th March. Com.

## FOREIGN NEWS.

**South Africa.** The news from the Transvaal has been of a more serious character this year. The Boers have made raids in different parts of the country and been more or less successful. 6000 volunteers are being raised at Cape Town; 5000 yeomen are to be raised in England and sent out; 1800 men are defending the Johannesburg mines. It is rumored that De Wet flogged and shot a British Agent of the Burgher Peace Company.

Holland is raising recruits for the Boers and the outlook for a speedy termination of the war is not so hopeful as it was two months ago.

**Gambia.** The rising in Gambia is spreading and the situation is considered grave. The latest telegram reports a renewal of fighting.

**China.** The Chinese Envoys have signed the Note of the Powers without protest. America has expressed a willingness to join others in withdrawing troops from Pekin. In the meantime inquiries are being made both in England and America as to the truth of the reports that the international troops committed atrocities in China.

**Russia.** Five thousand passengers have been snowed up on the railway in South Russia and 120 frozen to death.

**England.** A terrible gale was experienced along the coast of England last month and much shipping destroyed and many lives lost. It was the worst experience of the kind England had had in years.

### Death of Queen Victoria.

Yesterday afternoon just as we were going to press came tidings of the death of our beloved Empress Queen.

The telegram from Calcutta was as follows:—

Bulletin. London 22nd 7.6 P.M. Her Majesty Queen Empress Victoria is dead.

The tidings will cause world-wide sorrow such as the death of no other reigning Sovereign could possibly cause. Aside from the fact that she was ruler of the greatest nation of the earth, she had endeared herself to every nation, by her noble, loving Christian life. Born on May 24th 1819 and coming to the throne June 20th 1837 she has reigned longer than any other sovereign of England, and than any other ruler in the world. We hope to note some of the principal events of this wonderful reign in our next issue. In the meantime we join the great throng of her admirers in heart-felt sorrow for the loss of one who has reigned so wisely and well over England and England's peoples, and who by her many womanly qualities and her noble Christian life has endeared herself to the hearts of all the followers of Christ the world over.

# உதயதாரகை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

௧௧ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ௧௯௦௧ ௵ தை ௴ ௨௪ ௳ வியாழக்கிழமை. [சங்கியை, ௨



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின்

"லேடி கோடன்" "லேடிஅவலக்" கப்பல்கள்பின்வருந்தேதிகளில்மண்டைதீவிலிருந்துகொழும்புக்குப்போகவிருக்கின்றன

| பாம்பன்வழியாக | | பருத்தித்துறைவழியாக | |
|---|---|---|---|
| கோடன் 1901ம் ௵ தை ௴ | ௫ | அவலக் தை ௴ | ௫ |
| " " " | 16 | " " | 18 |
| " " " | 30 | " மாசி | 1 |

W^m Mather, & Son. Agents.

## BRILLIANTS.—வைரங்கள்.

இங்கிலிஷ் கமலங்கள், கடுக்கன்சோடிக்கேற்ற சுதமானவைகள், கட்டிய கடுக்கன்கள், சிவப்புக் கடுக்கன், பட்டைச்சிவப்பு, உயர்ந்த புஷபராகங்கள், வேண்டுவோர் யாழ்ப்பாணம் காவலர்வீட்டில் வாட் அன் டேவி மருந்துச்சாலையிலே பெற்றுச்கொள்ளலாம்.

## புதிய மருந்துகள்

மேகரோகம், மேகவாதம், மேகச்சூடு முதலிய வைகளுக்குக் கைகண்ட சஞ்சீவி நன்னாரி ரசாயனம் போத்தல் ரூ. 4. 00

பெண்களுக்குத் தீட்டுக்காலத்தி லுண்டாகும் கர்ப்பவாயுக்குத்துக்குக் கைகண்ட நிச்சயமான கர்ப்பரசாயனம் ரூ. 2. 00

சுரசங்காரி.—இது யாழ்ப்பாணமுழுதும்பேர்போன காய்ச்சல்மருந்து. காய்ச்சலை முறியாது மாற்றும். ரூ. 1. 50

இன்னும் எவ்விதநோய்க்கும் பார்த்த நல்ல மருந்துகள் கொடுக்கப்படும்.

வாட் அன் டேவி.
யாழ்ப்பாணம்.


## யாழ்ப்பாண வியாபார சமுதாயம்.

1901 ம் வருஷம் தைமாதம் 1 ந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்துக்கும் மட்டைக்களப்புக்கு மிடையிற் தந்திமூலமாய் அல்லது உண்டியல்மூலமாய்க் காசனுப்பவும் வருவிக்கவும் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றது.

இங்ஙனம்,
Wm. MATHER.
Managing Director.

## யாழ்ப்பாண வியாபார சமுதாயம்.

இன்றுதொடக்கம் மேற்சொல்லிய சமுதாயத்தவராற் தருந்த அடைவின்பேராற் பணங் கடனுக்குக் கொடுக்கப்படும்.

1900 ம் ௵ மார்கழி ௴ 1 ௳.

## அறிவித்தல்.

இதனோடு தொடர்புடையார் சகலருக்கும் இத்தால் அறிவிப்பது.

நான் எனது மாமனுர் விஞசித்தம்பி சுந்தப்பிள்ளைக்கு (முன் கிராவியடி வண். மேற்கு தற்போது வட்டு மேற்குகுடி) கொடுத்திருந்த அற்றோணித் தத்துவத்தை இன்றையத்தினத்தில் அழிக்கிறேன். ஆகையால் எனக்காக அவர் கையெழுத்துப்போடும் எந்தப்பற்றுச்சிட்டையாவது மற்றும் எந்தச்சாதனத்தையாவது நான்பொறுமதியானதாக ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

ச. விசுவனுதன்.

கோலாவத்தூர் 15-12-1900.

## விளம்பரம்.

யாழ்ப்பாணத்திலே நகரசங்கம் (முநூனிசிப்பாலிற்றி) ஏற்படுத்தவேண்டியதோவென்பதையாலோசிக்க வருகிறமாசிமாதம் 2 ந் திகதி சனிக்கிழமை மதியந்திரும்பி இரண்டரைமணிக்கு யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டிலே ஒரு பிரசித்தசபை கூட்டப்படும். நகரச் சங்கச் சட்டவிச்சட்டப்படி சம்மதங் கொடுக்கவேண்டிய யாழ்ப்பாணவாசிகளையெல்லாம் அக்கூட்டத்துக்கு வரும்படி இத்தாலறிவிக்கப்படுகுது.

J. W. B. Carbery,
யாழ்ப்பாணக் கச்சேரி ௧௯௦௧ ம் ௵ தை ௴ ௧௬ ௳.
அசாங்கவிபிதர்.

## விளம்பரம்.

இத்தால் சகலருமறியவேண்டியது. யாழ்ப்பாணம் வைதடிகுடி சுப்பிரமணியர் சின்னத்தம்பியாகியநான் அறிவிப்பது. எனக்கும் எனதுபெண்சாதி சுந்தரசிப்பிள்ளைபேருக்கும் மறவன்புலோக்குடி சுந்தர்முருகேசரும் பெண் சின்னச்சியும் பிரசித்தநொத்தாரிசு இராமலிங்கம் வைத்தியநாதர்முகதாவில் ௧௮ ம் ஆண்டு மார்கழிமாதம் ௯0 ந் திகதி ௪௫௨௬ம் இலக்கத்தல் எழுதித்தந்த குத்தகையுறுதியையும், அதற்கு ஈடாகத்தந்த குறித்த சின்னச்சிபேருக்கு ௯௨ ம் ஆண்டு சித்திரைமாதம் ௨௬ ந் திகதி நொத்தாரிசு சி. வேலாயுதர் முகதாவில் ௫௦௫0 ம் இலக்கத்தில் முடிந்த சீதன உறுதியையும் இரத்துவிட்டேனென்பதை அறிவிக்கிறேன். இவ்வுறுதிகளை எடுத்துக்கொடுப்பவர்களுக்கு ருபாய் பத்து உபகாரங்கிடைக்கும்.

இப்படிக்கு, S. Sinnatamby.
வைதடி, ௧௯௦௧ ௵ தை ௴ ௧௬ ௳.

## விளம்பரம்.

இத்தாற் சகலருமறிக: சென்ற ஐப்பசிமாதம் ௧௧ ந் திகதி வெளிப்பட்ட தாரகையில் நான் எழுதிய விளம்பரம், சனம்தங்கிய ஐயம்பிள்ளை முத்தையாபிள்ளையின் சம்மதிப்படியும், தலைமை ஒவசியர் ஐ. இராசகாரியர் எழுதியகடிதங்களின்படியும், இவர்கள்உத்தரவோடு நான் கட்டிடத்தில் செலவிட்ட மிகுதிப்பணத்தை கொடுக்கச்சம்மதித்ததின்படியும் அக்கடிதங்களை வாசித்து எனக்குக்கொடுத்த சின்னத்தங்கத்தின் கேள்விப்படியும் அதைச் சங்கானை உபதேசியார்முன்னும் ஒத்தபடியும் அவுவின் நியாயமான பற்றுச்சீட்டின்படியும் நான் கொழும்புக்குப் புறப்படவேண்டிய தருணமதாகையால் அங்கிருக்கும்போது நான் சட்டுவித்த வீட்டுக் குறைவேலைகளையும், மற்றுங்காரியங்களையும்அவர்கள்பார்ப்பதற்கேஅத்தால் தத்துவத்தை நீக்கினேன்.

இவ்வுண்மைக்குமாறாய்சின்னத்தங்கம்மாத்திரம் தனக்காகவும் குறித்த மற்றிருவரும் எனக்குக் கொடுக்குமதியில்பேசாதிருக்க, எழுத்திலேகொடுத்திருக்க கள்ளக்கையொப்பமிட்டு அவர்களுக்காகவும் எழுதியபடியாலும் நான்இப்போ கொழும்பிலிருந்துவந்திருக்கிறபடியாலும், நான் வெளிப்படுத்திய அழித்தலை நியாயப்பிரமாணப்படி பெலப்பிக்கமுன் சின்னத்தங்கம் தப்பென்றபடியாலும் அத்தை இத்தாலழிக்கலாமானபடியால் அழிக்கிறேனென்றும், இன்றுதொடக்கம் அவரவர் கொடுக்கல்வாங்கல்களைக் கொடுத்துவாங்கி அவரவராக எனக்குக்கொடுத்ததத்துவத்தை இத்தாலன்றி நியாயப்பிரமாணப்படி அவரவர் உறுதியாலழித்து அதை எனக்கறிவிக்கும்வரைக்கும் நான் அவரவரின் தத்துவத்தைகொண்டுநடாத்த நியாயப்பிரமாணப்படி அத்தத்துவம்தத்துவமாயிருக்கிறதென்றும் இத்தால் வெளியரங்கப்படுத்துகிறேன். சின்னத்தங்கமே! எனது அழித்தல்வெளிப்பட்டு நாலவருஷத்தின்பின் வெளிப்பட்டாயே. இப்போ நான்வந்து கேள் நீரனவினவி உனைத் தரிசித்து உனதுமத்தியிலிருந்தும் ஒருமாதமாயிற்றே. எனதொப்பன்றேல் வழக்கைத்தொடர். உனதுமாறுபாட்டை உன் மக்களுக்கறிவித்திருக்கிறேன் என்றும் எனம். இராசகாரியர் பரிகரிக்கவருவதாய் அறிவித்திருக்கிறாரென்றும் அறிக.

இங்ஙனம், ஜி. யா. சின்னத்தம்பு.
சண்டிருப்பாய், ௯-௩-௧௯௦௧. தத்துவகாரன்.

## உதயதாரகை

௧௯௦௧ ம் ௵ தை ௴ ௨௪ ௳

## விக்தோரியா இராணிநாயகியார்.

### Queen Victoria.

அதியுத்தம காருண்ய மகத்துவந்தங்கிய பிரித்தானியராணியும் இந்திய சக்கிரவர்த்தினியுமாகிய அலெச்சண்டிறினு விக்தோறியாபெருமாட்டியார் சென்ற ஆதிவாரம் 1 மணிக்கு காலஞ்சென்றனரென்னுந் துக்கசங்கதி மின்தந்திமூலம்மனோவேகமாய்உலகமெங்குமெட்டிப் பெரும்பிரமிப்பையுண்டாக்கிற்று. "இராணிநாயகியார் சற்றே சுகவீனமாயிருக்கிறார், வைத்தியர்மார் அவரை வேலையின்றிஆறுதலாயிருக்கும்படி யோசனைசொல்லியிருக்கின்றனர்" எனச் சனிக்கிழமைவந்த தந்திச் சமாசாரமெங்கும் அறியப்படுதற்குமுன் இரண்டுமூன்று நாட்களுக்கிடையில் இராணிநாயகியார் காலஞ்சென்றனரென்னுஞ் செய்தி எட்டிற்று. ஐயையோ! இச்செய்தி "இரவி அஸ்தமியாத" பிரித்தானிய ராச்சியத்தில் மாத்திரமன்று உலகமெங்கும் பெருந்துயரத்தைக் கொடுத்திருக்கும். பிரித்தானியராச்சிய கிரீடந்தாங்கியரசாண்டோருள் அல்லது உலகத்திலுள்ள எத்தேசத்திலாவது எச்சாதியாருளாவது இதுகாறும் ஆளுகையாசக்கரஞ்செலுத்தினோருள் எவராவது, மனுஷ சாதிக்கு இவ்வளவு சுகசலாக்கியங்களும் இவ்வளவுநன்மைகளும் நிறைந்ததும், இவ்வளவு உன்னதமகத்துவந்தங்கியதும், இவ்வளவுநீண்டதுமான ஆளுகைசெலுத்தியதில்லை. குணாதிசயங்களையெடுத்துப்பார்க்கின் "தன்னுயிர்போல மன்னுயிரோம்புந் தயாளசிமாட்டியாயும், மனைவியாய், மாதாவாய், இராணியாய் யாருந் தம்மிதயத்திருத்திப் போற்றிப் பார்த்து நடத்தற்கேற்ற நன் முன்மாதிரியாயும் விக்தோறியாபெருமாட்டியார் விளங்கினர்.

இராணிநாயகியார் இங்கிலந்துதேசத்தை அரசாண்ட மூன்றும் ஜோர்ச் அரசரின் நான்காங் குமாரராகிய டியூக் அவ்கெண்ட் என்பவரின் ஏகபுத்திரியாய் 1819 ம் ஆண்டு வைகாசிமாதம் 24 ந் திகதி இப்பூவுலகிலவதரித்தனர். ஜோர்ச் அரசரின் முதல் மூன்று குமாரர்க்கும் சுதந்தரவாரிசுகளில்லாதுபோக நாலாங்குமாரரின் ஏகமகவாகிய விக்தோறியா மாதரசி சிங்காசனத்துக்கு வருவாரெனயாரும் நினைத்திலர். இராணியார் நாலுமாதக் குழந்தையாயிருக்கும்போதே தந்தையார்மரித்துப்போகத் தாயாரே இவரை இவ்வளவு குணாதிசயங்களுடையவராய் வளர்த்தனர். இவரின் ஒன்பதாம்பிராயத்திலேயே இவர் பிரித்தானிய ராச்சிய சிம்மாசனபதியாய் வரலாகுமென்றெண்ணற் கிடமுண்டாயிற்று. அவ்வெண்ணம்மெய்ப்பட, இங்கிலந்தின் இராசாவும் பெரியதந்தையாருமாகிய நான்காம் உவில்லியம் மரித்துப்போக, 1837 ம் வருஷம் ஆனிமாதம் 20 ந் திகதி காலை 5 மணிக்குக் கந்தர் புரியின் மகா அத்தியட்சரும் லோட்சேம்பளேனும் விக்தோறியா மாதரசியை நித்திரைப்படுக்கையிலிருந்தெழுப்பி "இங்கிலந்தின் ராணியாயினீர்" என அறிவித்தனர். இவரது குணாதிசயங்களை அறிந்தவர்களாகிய பிரசைகள் எல்லோரும் "இராணி நீடூழிகாலம்வாழ்க" என ஆர்ப்பரித்தார்கள். ஆயினும் இராணியார் தம்மேல்வந்தபொறுப்பையுணர்ந்து தமது தாயாரின் கழுத்தைக் கட்டி அழுதனர். விக்தோறியா இராணியார் பட்டத்துக்கு வந்து ஒருவருடமானபின் 1838 ம் வருஷம் ஆனிமாதம் 28 ந் திகதி சகல பட்டாபிஷேகச் சடங்குகளும் நடைபெற்றன.

இராணியார் 1840 ம் வருஷம் மாசிமாதம் 10 ந் திகதி ஜேர்மனியிலிருந்த தமது மைத்துனராகிய பிறின்ஸ் அல்பேட் என்பவரை விவாகஞ்செய்து ஈருடலோருயிரென விசைந்தில்லறம்நடத்தி இராசகுஞ்சாங்களெனத்தகுந்த ஆண்கள் நால்வரும் பெண்கள் ஐவருமாய் ஒன்பது பிள்ளைகளுக்குப் பெற்றாராயினர். பிறின்ஸ் அல்பேட் இராணியின் அரியநாயகர்மாத்திரமன்று, ஆலோசனைக்குரிய மந்திரியுமாகி இங்கிலந்திற் கல்விவிருத்தி சாஸ்திர விருத்திக்கேற்ற பற்பலமுயற்சிகளைநடத்தி 1861 ம் வருஷம்மார்கழிமாதம் 14 ந் திகதிபரலோகபிராப்தியாயினர். விக்தோறியாபெருமாட்டிக்கிதுதாங்கொணாத்துயராயினும்,பொறுமையாய்ச்சகித்துக்கொண்டு இராச்சியபாரத்தோடு குடும்பத்தையும் நடத்திவந்தனர். மூதற்பிள்ளையாகிய விக்தோறியா அடிலேற் பெருமாட்டி ஜேர்மனிய சக்கிரவர்த்தியான உவில்லியம் பிரதரிக் என்பவரை விவாகஞ்செய்து பேரப்பிள்ளைகளையுங் கண்டிருக்கின்றனர். பத்தாவாகிய சக்கிரவர்த்தி இறந்துபோக அவரின் மகனாகிய உவில்லியம் என்பவரே தற்கால ஜெர்மன்சக்கிரவர்த்தியாயிருக்கின்றனர். இரண்டாம்பிள்ளையாகிய அல்பேட் எட்வேட் இளவரசரே இப்போது பிரித்தானிய ராச்சிய பட்டத்துக்குரியவராயிருக்கின்றனர். இவர் அழகுசௌந்தரியாகிய தென்மார்க் ராசகுமாரியை விவாகஞ்செய்து புத்திர பௌத்திரருடையராயிருக்கின்றார். இவரின் மூத்தமகன் விக்றர் விவாகப்பொருத்த ஏற்பாட்டிலமைந்திருக்கையிற் காலஞ்சென்றுபோக இரண்டாங்குமாரர் அவர்க்குவாசுப்பண்ணியிருந்த மாதரசியை விவாகம்முடித்துப் புத்திரருடையராயிப்போது உவேல்ஸ் இளவரசரென்னும் பட்டத்துக்குரியராயிருக்கின்றனர். மூன்றாம்மகவாகிய அலிஸ்பெருமாட்டி ஹெசிகாட்டு லூயிஸ்பெருமானை விவாகஞ்செய்து புத்திரசம்பத்துப்பெற்று முதன்முதல் மரணத்தாற் பிரித்தெடுக்கப்பட்டார். நான்காம் மகவாகிய டியூக் அவ் எடின்பேக் ருஷியசக்கரவர்த்தியின் மகளை விவாகஞ்செய்து முதலில் ஆங்கில யுத்தக் கப்பற் தளபதியாயிருந்து பின் சாக்ஸ கோபேக் கோதாஎன்னும் ஜேர்மன் நாட்டின் அதிபதியாய் விளங்கி சென்றவருடத்திற் காலஞ்சென்றுபோயினர். தற்கால ருஷியசக்கரவர்த்தி இவர்க்கு மருமகனும் தமையனாகிய அல்பேட் எட்வேட் இளவரசர்க்கு பெறுமகனுமானவர். ஐந்தாம் மகவாகிய ஹெலினுபெருமாட்டி அகுஸ்தென்பேக் நகரத்தின் கிறிஸ்தியன் பிரபுவுக்கு மனைவியாயிருக்கின்றனர். போவர் யுத்தத்திற்காய்ச்சென்று சிலநாட்களின்முன் பிறிற்றோரியாவிற் குடற்சுரத்தால்மரித்தவர்இவர் இளங்குமாரனே. ஆறும்மகவாகிய லூயிசாபெருமாட்டி ஆர்க்கைல்பட்டவர்த்தனருடைய மகனாகிய லோண்பிரபுவைவிவாகஞ்செய்திருக்கின்றனர் ஏழாம்மகவாகிய டியூக்அவ்கொனோற்று புருஷியதேசத்து லூயிஸ் பெருமாட்டியை விவாகஞ்செய்து அயர்லந்திற் தரைச்சேனைநாயகமாயிருக்கின்றனர். லோட் றப்பேட்சோடு தென்னாபிரிக்க யுத்தத்துக்குப்போக ஆத்திரப்பட்டும் இடம்பெறாதவர் இவரே. எட்டாம் மகவாகிய லியோபோல்ட் என்னும் அல்பனிபிரபு வால்டெக்யாகாணத்தின்ஹெலினு என்னுங்கன்னிகையைமணம்முடித்து அவளையும் ஏகபுத்திரியையும் விட்டுப் பலவருடங்களின்முன் மரித்தனர். ஒன்பதாம்பிள்ளையாகிய வியாற்றிறிஸ் பெருமாட்டி அன்னைவின்நிமித்தம் 28 வயதுவரைக்கும் விவாகம்முடியாதிருந்து பின் பாத்தென்பேச் பிரபுவைமணம்புரிந்து தாயாருடனேயே அரமனையில் வசித்துவந்தவர். விக்தோறியாராணியின் புத்திர, பௌத்திர, பிரபௌத்திர பௌத்திரிகளாய் எழுபதுபேர்வரையிலுயிரோடிருக்கிறார்கள்.

இராணியின்காலத்தில் ஏறக்குறைய அரு கோடிசதுரமைல் விஸ்தாரமானதேசம் பிரித்தானியராச்சியத்தோடு புதிதாய்ச் சேர்க்கப்பட்டது. அதில் நியூசிலன், வீச்சி, வான்கூவர், கொலம்பியா, பாக்லன், பொற்கரைநாடு, லாகோஸ்,நத்தால்,பெச்சுவானலாண்ட்,திரூன்ஸவால், ஒறேஞ்சுநாடு, பெறிம, கொங்கோங், கெனூன், லபுவான், வடபோணியோ, நியுகினி ஆதிய கலனிகளும் இந்தியாவாதிய தேசங்களும் அடங்கும். இராச்சியங்களுட் பிரித்தானியராச்சியமே பெரிதும் விசேஷமுமாயிற்று. பூமியின் தரையிலாறிலொருபங்கும் குடிசனத்தில் நாலிலொருபங்கும் இராணியின் கீழுள்ளன. சாதிபேதம், மதபேதங்கட்கவில்லை, இப்போ

முதூ நாற்பதுகோடிசனங்கள் இராணியின் பிரசைகளாயப்புலம்புகின்றனர். விக்தோறியாராணியின் ஆளுகைக்காலமாகிய 63½ வருடத்தில் உலகில் நடைபெற்றிருக்கும் அரசாட்சி மாறுதல் சனசங்கசீர்திருத்தமாறுதல்களுக்களவில்லை. தத்துவசாஸ்திரம், இரசாயனம், பூபந்தசாஸ்திரம், வைத்தியசாஸ்திரமாதியவற்றிற் கண்டறியப்பட்ட ஞாதனங்களும் நன்மைகளும் விபரிப்புக்கடங்கா. புகைவண்டி, புகைக்கப்பல், கைத் தொழில் யந்திரங்கள், மின்தந்தி, மின்தீபம், தூரதொனிஇயந்திரம், பேசும் இயந்திரம், ஆகியவற்றால் மனுக்குலத்தோரடைந்திருக்கும் சுலாக்கியமெவ்வளவு.

## கனம். தோமஸ் சினேல் சிமித் ஐயர்.

## The Late Rev. Thomas Snell Smith.

ஏறக்குறைய 27 வருடங்களாய் யாழ்ப்பாணத்திலே அமரிக்கபிறதேசசுவிசேஷதிருத்திய சங்கத்தின் மிஷனரிமாரிலொருவராய்த் தேவபணிவிடைசெய்து சுகம்நோக்கி இற்றைக்கு 3 வருடங்களின்முன் அமரிக்கா சென்றவராகிய கனம். சிமித்ஐயர் அவர்கள் சென்ற[illegible]கூற்றிற் கர்த்தருக்குள் நித்திரையடைந்தனரென்[illegible]செய்தி யாழ்ப்பாணிகள் யாவருக்குந் துயரங்கொடுக்குஞ் சங்கதியாயிருக்கும். கனம் சிமித் ஐயர் 1845ம் ஆண்டு தைமாதம் 24ந் திகதி வாணியிலேபிறந்து, [illegible]ணி, உடுப்பிட்டியாதிய இடங்களிலே மிஷனரியாயிருந்த தமது தந்தையாரின்கீழ் யாழ்ப்பாணத்திலேயே வளர்ந்தவராகையால் யாழ்ப்பாணத்தாரின் உயர்வில் விசேஷ[illegible]சிந்தையுடையவராயினர். இவர் பாலியப்பருவங்கடந்து வாலிபப்பிராயத்தையடைந்தவுடனே அமரிக்காசென்று ஐக்கியதேசத்திலுள்ள விசேஷ கல்லூரிகளிலொன்றாகிய அம்மேஸ்ற் கல்லூரியிற் படித்து அதி விசேஷ விருதுகளுடன் அரங்கேறி 1871ம் ஆண்டு ஆடிமாதம் தாம் பிறந்துவளர்ந்ததேசமாகிய யாழ்ப்பாணத்துக்கே மிஷனரியாய் அனுப்பப்பட்டு வந்துசேர்ந்தனர். முதலாவதாய் உடுப்பிட்டியிலும் பின் மானிப்பாயிலும் சுவிசேஷஊழியம் நடத்தி, 1876ம் ஆண்டு தெல்லிப்பழைசென்றுபோதனாசாலைப்பொறுப்பையும் கையேற்றனர். இந்த இடத்தில் 20 வருடங்களாய்வேலைபார்த்தபின் சுகமாறுதலுக்காக அமரிக்காசென்று [illegible]ரும்நோக்கமாய் 1898ம் ஆண்டு பங்குனிமாதம் யாழ்ப்பாணக்கிறீஸதவர்களின் வந்தனோபசார வாழ்த்துதலோடு ஐக்கியமாகாணத்துக்குப் புறப்பட்டனர். இவர் யாழ்ப்பாணத்திலிருந்தபோது சமியாக்குணம் [illegible]ருமல் என்னும் அற்பசுகவீனங்கள் காணப்பட்டனவேயன்றி விசேஷநோய் ஏதும் இருக்கிறதாக அறியப்படவில்லை. ஆயினும் இவர் ஐக்கியதேசத்திலிறங்கி அங்குள்ள வைத்தியர்சிலர்க்குத் தம்மைக் காட்டியபோது அவர்கள் அவரைப் பரி[illegible]ருப்பதாயும் சிலமாதங்களுக்குமேற்பட அவர் சீவிப்பது கூடாதகாரியமென்றும் அறிவித்தனர். ஐயையோ! சங்கதியாய்இச்செய்தியைக் கேள்விப்பட்டபோது அவரினதும் அவரின் அரிய பாரியாரினதும், பிள்ளைகளினதும் மனங்கள் என்ன துயரத்தையடைந்திருக்கும். யாழ்ப்பாணத்திலுள்ளார்க்கிச்செய்தி பெரும் பிரமிப்பையுந் துயரத்தையுங்கொடுத்ததே. ஆயினும் கனம், சிமித்ஐயரவர்கள் தைரியத்தை விட்டுவிடாது கர்த்தரிற்பெலனடைந்து சகல்நோய்களைப் பரிகரிக்கும் ஓர் ஆஸ்பத்திரிசென்று தோற்புரையால் மருந்துகள்செலுத்திப் பரிகரிக்கப்பெற்றனர். வைத்தியரின் கெட்டித்தனத்தினால் சரீரக்கட்டு ஒருவாறு கலைக்கப்பட்டதாயினும், சுவழமைக் சுமிஞ்சிப்பெரிதாகி வேறுநோய்களையுண்டாக்கிவிட அவர் நல்லாயத்தத்துடனே சென்றமார்கழிமாதம 17ந் திகதி பரமசுகத்தையடைந்தனர். வைத்தியரின்கீழ்ப் பராமரிப்பிலிருந்தகாலங்களிலும் ஓரிடத்திலிராது அங்குமிங்குஞ்சென்று சபைகளிற் பிரசங்கங்கள்செய்து எழுப்புதல்களையுண்டாக்கி தாம் வருவதுகூடாதாயினும் வேலையைத் தொடர்ந்துநடத்தும்படி புதிய மிஷனரிமார் யாழ்ப்பாணத்துக் கனுப்பப்படுவதற்குப் பெரும்பிரயாசையடைந்தனரென்றால் அவர் யாழ்ப்பாணத்தாரிற் கொண்டகரிசனையெவ்வளவென்றதை நாம் கூற அவசியமின்று.

தெல்லிப்பழையில் விளங்கும போதனாசாலைத்தொழிற்சாலைகளும் அவற்றிற்குரியனவான சான்டேஷமண்டபம் (Sanders Hall), பழயமாணவர் மண்டபம் (Alumni Hall), கைத்தொழிற்பாடசாலைக் கட்டிடங்களும் காலஞ்சென்றுபோன சிமித ஐயரை யாழ்ப்பாணத்தார்க்கென்றும் விசேஷமாய் நினைப்பூட்டுவனவாயிருக்கும். மிஷன்சங்கத்திற் பணங் குறைவுபட்டதனாற் போதனாசாலையை விட்டுவிடுவதற்கு மிஷனரிமார் யோசனைபண்ணியநேரத்திலே இவர் மிஷனிலிருந்து சொற்ப உதவிமாத்திரம்பெற்றுக்கொண்டு முழுப்பொறுப்பையுந் தாமேற்று, யார் என்னவகையாய்த் திருத்தியீனமும் மொறுமொறுப்புங்காட்டியும் கவனியாது பலரையும் பிடித்துப் பணஞ்சேகரித்துப் போதனாசாலைக்கெனப் புதியவோர்நிலம்வாங்கி மேல்வீடுசேர்த்து அலங்காரமாளிகைசமைத்து, யாழ்ப்பாணத்தின் நன்மைக்காய் அரும்பிரயாசைப்பட்டு ஊழியஞ்செய்து மரித்துப்போன கனம், சான்டேஷ ஐயரின் நாமத்தை அதற்குச் சூட்டினர். எல்லாரும் ஆயிரம் பதினாயிரம், இலட்சக்கணக்கான முதல் சேர்த்துக்கொண்டு ஒவ்வோர் கட்டிடமெழுப்ப முயற்சிப்பர். ஆனால்இவரோ பணமெங்கேயிருந்துவருகின்றதென ஒருவரும் அறியுமுன் போதனாசாலைமாணவரைக் கூட்டிச்சென்று சான்டேஷமண்டபத்துக் கலதிபாரம்வெட்டினர். வேலைகளைத்தொடக்கிக்கொண்டேவருடந்தோறும் பணத்தைச் சேர்த்துச்சேர்த்துக் கட்டிடங்களையெழுப்பினர். மெஸ. கிறீன் ஆதிய இலங்கையரசாட்சி வித்தியாகர்த்தர்களோடு வழக்காடிப் போதனாசாலையிலே உபாத்திமாரை ஆயத்தஞ்செய்வதற்காய் இராணிமாணவர்ப்பரீட்சைகளேற்படச்செய்து அவற்றின்தசபரிப்புக்காய் அரசாட்சியார் விசேஷ உதவிநன்கோடையளிக்கும்படியுஞ்செய்தனர். மூலாதாரபாடசாலைகளிற் பல திருத்தங்களிவரின் பிரயாசத்தினாலுண்டாயின வாயினும்,உபாத்தியாக்கற்சாலைகள், கைத்தொழிற்சாலைகளுக்கு உதவிநன்கொடை கிடைத்தற்குரிய அரசாட்சி வித்தியாபகுதிப்பிரமாணங்கள், கனம். சிமித் ஐயர் வித்தியாகர்த்தராயிருந்த மெஸ். கிறீனோடு பட்ட பிரயாசங்களின் பெறுபேறுகளேயெனல் வழுவாகாது. போதனாசாலைகளிலே கற்பிக்கப்படும் இங்கிலீஷையுஞ் சோதித்து உதவிநன்கொடை கொடுத்தல்வேண்டுமென்னும்விஷயத்தில் வித்தியாகர்த்தர் மெஸ. கிறீன் கனம். சிமித் ஐயரின் எழுத்துக்களை முற்றிலுமெதிர்த்துத்தட்டிவிட்டனர். ஆயினும் இப்போதிருக்கும் புதியவித்தியாகர்த்தர் அதற்குச் சம்மதித்து அதையுமோர் பிரமாணமாக்கியிருப்பது சந்தோஷம். இங்கிலிஷ கல்வி பெற்றோர் மிகுதியும் கொழும்பு, கண்டி, இந்தியா, சிங்கப்பூர் ஆதிய இடங்களுக்குச் சம்பளங்கூடியஉத்தியோகமுயற்சியிற் சென்றுவிட, கனம். சிமித் ஐயரின் கீழாய்ப் போதனாசாலையிலிருந்து வெளிப்பட்டவர்சனேயிப்போதுயாழ்ப்பாணமெங்கும், உபாத்திமார்,உபதேசிகர்மார்,போதகர்மார், நொத்தாரிசுமாராதியோராய் நிலைபெற்றுயாழ்ப்பாணத்தவரின்மனோவிருத்தி சமயவிருத்திக்கான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கின்றனரென்பது யாவருங் கவனிக்கக்கூடிய காரியம். கைத்தொழின்முயற்சி இழிவானதென மதிக்கப்பட்டகாலத்திலே அதனை ஆரம்பித்து, இடையூறுகளையெல்லாம் மேற்கொண்டு, இயந்திர சூத்திரங்களின்மாதிரியை இத்தேசத்தவர்க்குக் காட்டினோர் கனம். சிமித் ஐயரேயாம்.

கலாமுயற்சி தொழின்முயற்சிகளில் மாத்திரமன்று ஆவிக்குரிய வளர்ச்சியிலும் அதி காதல்கொண்டவராய்ப் பிரசங்கபீடங்களிலேறி அதி மதுரமும் எழுப்புதலுமான பிரசங்கங்கள் செய்து, சபைகள்பெருகிச் சுயதாபரிப்பில்நிலைப்படுவதற்காய் அதிகமாய்ப் பிரயாசைப்பட்டனர். வேதாகமசங்கம், சிறுபுத்தக சங்கங்களிலும் தலைவரும் விசிதருமாயிருந்து சுவிசேஷவிருத்திக்காய் அதி பிரயாசையடைந்தனர். யாழ்ப்பாணக் கிறீஸ்தவர்களின் நன்மைக்காய்ச் சம்ரட்சணைசங்கம் ஸ்தாபகமாவதற்குக் காரணமானோரிலிவருமொருவரே. தமக்குச் சரியென்று காணப்படுமெதையும், யாரெதிர் கூறியென், யார்கோபிக்கிலென் ஸ்தாபித்தே முடிக்கும் வல்லமையுடையவர். பலவகையாயுந் தம்மை யாழ்ப்பாணத்தவர்க்காயொப்புக்கொடுத்து ஆறுதலின்றி அதிகமுமையாய் வேலைசெய்ததினாலேயே திடகாத்திரதேகியாகிய இவர் 56ம் பிராயத்தில் மரிக்கவேண்டியதாயினர்.

இவர்க்கு நான்கு பெண்பிள்ளைகளும் இரு ஆண்பிள்ளைகளுமிருக்கிறார்கள். பெண்பிள்ளைகளிருவர் பள்ளிக்கூடத்திற் படித்து அரங்கேறியிருக்கின்றனர். அவர்களில் மூத்தவராகிய மிஸ மேறி சிமித் படித்துத் திரும்பிவந்து போதனாசாலையிற் சிலகாலம் படிப்பித்துப் பின் தந்தைதாயருடனே அமரிக்காசென்றவர். இரண்டாம்மகளாகிய மிஸ. மில்லி சிமித் வர்த்தககம்பனியில் வேலையாயிருக்குமொருவரை விவாகம்முடித்திருக்கின்றனர். பெண்பிள்ளைகளிருவரும் ஆண்பிள்ளைகளிருவரும் ஐக்கியதேசத்திலுள்ள பாடசாலைகளிற் படிக்கிறார்கள். சிமித் ஐயருக்கேற்ற துணைவியாய் யாழ்ப்பாணத்திலே நல்ல கிறீஸ்த ஊழியஞ்செய்து அவருடன்கூடிச்சென்ற சிமித்அம்மாவுக்கும் பிள்ளைகளுக்கும் இவரின்மரணம் பெருந்துயரத்தைக் கொடுக்குமென்பதில் மயக்கமில்லை. ஆயினும் சர்வஞானம்நிறைந்த கடவுள் தமக்கு உத்தமமென்று கண்டதைச் செய்வார். துயரப்படுவோர்க்காறுதலளிப்பார் அவரே.

## அல்பேட் எட்வேட் அரசர் நீடூழிவாழ்க

## Long Live King Albert Edward.

விக்தோறியாராணிக்குப்பின் பிரித்தானிய ராச்சியபாரத்தைச் சுதந்தரித்திருப்பவராகிய அதியுத்தம காருணியம்கத்துவர்தங்கிய அல்பேட் எட்வேட் அரசர் நீடூழிவாழ்வாராக, இவர் அங்கிலேயராச்சியத்தின் ஏழாம் எட்வேட் அரசராவர். இவர் அங்கிலோராச்சியஇராசாவாகவே தென்மார்க் இராசபுத்திரியாகிய இவரின்மனைவி இராணியாகின்றனர். இவரின் மூத்தகுமாரன்விவாகம்முடிக்குமுந்திமரித்துப்போனமையால் இரண்டாங்குமாரனாகிய டியூக் அவ்யோர்க் உவேல்ஸ் இளவரசராகின்றனர். இப்போது முடிதரிக்கப்போகிற அல்பேட் எட்வேட் அரசர்க்கு வயது ஐம்பத்தொன்பது. இவர்க்குப்பின் பட்டத்துக்குரியவரான உவேல்ஸ இளவரசர்க்குவயது முப்பத்தாறு. இவர்க்குப்பின்பட்டத்துக்குரியவரான மகன் எட்வேட் இளவரசர்க்குவயது ஏழு.

ஜேர்மனிதேசத்தின் கிரீடாதிபதியாகிய உவில்லியம்சக்கிரவர்த்தி தாம் விக்தோறியாராணியின் மூத்தபிள்ளையின்மகனானபடியால், விக்தோரியாராணியின்பின் தாமே பிரித்தானியராச்சியபட்டத்துக்குரியவரென முன் பலமுறைகூறினவர். இப்பொழுதும் அக்கருத்தினராய்த் தம் உரித்தை நாட்டவெளிப்படுவாரோ?

## யாழ்ப்பாணம்

**காலநிலை. — Weather** —சென்றகிழமை பெய்த மழை சிலஇடங்களில், விளைந்தநெல்லுக்கு நட்டமாய் முடியுமோவென ஆலோசித்தற்கேற்றதாயிருக்கின்றது. இரவிற் பனியதிகம், வாரிலே காய்ச்சல் பொக்குளிப்பானுதியநோய்கள் அங்குமிங்குங்காணப்படுகின்றன.

**நகரசங்கம் — Municipality.**—சென்ற 7ந் திகதி கச்சேரிவீட்டிற்கூடிய சுகாதார சங்க காரியஸ்தர்கள், கொழும்பு, கண்டி, காலியென்னும் பட்டினங்களிற்போல யாழ்ப்பாணத்திலுமோர் மியூனிசிப்பாலிற்றி அல்லது நகரசங்கமேற்படுத்துவது அவசியமோவென ஆலோசிப்பதற்காய் ஓர் பிரசித்தகூட்டங்கூடியோசிப்பதுதகுதியெனத்தீர்மானஞ்செய்தனர். அத்தீர்மானப்படி வருகிறமாசிமாதம் 2ந்திகதி சனிக்கிழமை 2½ மணிக்கு ஓர்பிரசித்தசபை டிஸ்திறிக்கோட்டுவீட்டிற் கூட்டப்படுமென்றும்,நகரசங்கசட்டங்களைச்சட்டப்படி அதற்குச்சம்மதிகொடுக்கவேண்டியயாவரும் அச்சபையிற்சமுகமாயிருந்து தமது எண்ணத்தை அறிவிக்கவேண்டுமென்றும்விளம்பரஞ்செய்யப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணம் முழுவதற்குமுரிய சுகாதாரவிஷயங்களும் தெருக்கள் சம்பந்தமானகாரியங்களும், இதுவரைக்கும் சுகாதாரசங்கமென்னுமோர் சங்கத்திற்சேர்ந்த காரியஸ்தரின் யோசனைப்படி நடைபெற்றுவருகின்றன. ஆயினும் வரவரச் சனத்தொகையேறுவதினாலும் கவனிக்கவேண்டியவிஷயங்களதிகமாயிருப்பதினாலும், கொழும்பு, கண்டி, காலியென்னுமிடங்களிற்போலச் சனங்களாற்தெரியப்படும் பிரதிநிதிகளடங்கிய நகரசங்கமொன்று சீதாரியில் ஸ்தாபிக்கப்படவேண்டிய தவசியம் என்பது ஏசண்டர் மெஸ. ஐவேஷின் கருத்துப்போல விளங்குகின்றது. சீர்திருத்தமும்அதிகப்படச் சனங்களும் படிப்படியாய்த் தங்கள் காரியங்களைத் தாங்கள் பார்க்கத்துவங்குவதும் நியாயந்தானே.

**வட்டுக்கோட்டைகிழக்குஅங்கிளபாடசாலை — A New Eng. School.**—வலிகாமம்மேற்குமணியகாரன் மெஸ். இ. தில்லைநாதரவர்களை மனேச்சராயும், மெஸ. வி. சின்னத்துரை (F. A.) யைத் தலைமை உபாத்தியாயராயுமுடைய வட்டுக்கோட்டை கிழக்குஅங்கிளபாடசாலை அரசாட்சியாரால்உதவிநன்கொடைப்பாடசாலையாயேற்றுக்கொள்ளப்பட்டதென அறிவது சந்தோஷம். பள்ளிக்கூடங்கள் பெருகுவது தேசத்தின் கல்விவிருத்திக்கேதுவன்றோ?

**ஆட்கள். — Personal.**—வெடுக்தீவு, இரணைதீவுப்பகுதிகளுக்குச் சுற்றோட்டத்திற்சென்றிருந்த மெஸ். ஐவேஷ,திங்கட்கிழமை ஊர்காவற்றுறைசேர்ந்து தலைவரிக்கழிவு கவனித்து அடுத்தநாள் யாழ்ப்பாணஞ்சேர்ந்தனர்.

கொழும்புப்பகிரக்கவேலைப்பகுதியில் வேலையாயிருக்கும் மெஸ். எ. தில்லையம்பலமுதலியார் சிலவாரலீவில் யாழ்ப்பாணம்வந்து நவாலியிலேதங்கிச் சுற்றமித்திரரைத்தரிசித்து சென்றகிழமைகொழும்புநோக்கினர்.

யாழ்ப்பாணக்கச்சேரியிலே ஏசண்டருக்கு இரண்டாம்உதவியானாயிருந்த மெஸ கொன்றோய் சுதேசபாஷையிற் பரீட்சைகொடுக்கும்படி கொழும்பு சென்றிருக்கின்றனர்.

அநுராசபுரத்தின் [illegible] தாணியாயிருந்த பிறக்தர் மெஸ். சம்பங்கர் அவ்விடத்தில் அசிட்டிங்காய் டிஸ்திறிக்கோடு பொலீஸ்கோடுகளில் உதவிநீதிபதியாய்வேலைபார்க்கும்படி நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

மன்னார்ப்பகுதியிலே தாணிவேலை பார்த்தவராகிய பிறக்தர் மெஸ. சி. எச். தம்பு சுகம்நோக்கி யாழ்ப்பாணம்வந்து வட்டுக்கோட்டையிலேவசிக்கின்றனர். யாழ்ப்பாணத்திற்தங்கி வேலைபார்க்குங்கருத்துடையராயிருக்கின்றனரெனக்கேள்வி.

கோயம்புத்தூர்ப்பகுதியிலே தலைமைக்கிளாக்காயிருக்கும் மெஸ. சி. கதிரவேலு சிலமாசலீவில் யாழ்ப்பாணம்வந்து அராலியிலே தமது சுற்றமித்திரர் நடுவிற் தங்குகின்றனர்.

அராலிவாசரும்பிராக்கலண்மேர்ந்தில்வேலையாயிருப்பவருமாகிய மெஸ. எல். கந்தையா சிலமாதலீவில் யாழ்ப்பாணம்வந்து இனசனத்தவர்களைச்சந்திக்கின்றனர்.

ஆறுமாதலீவில் யாழ்ப்பாணம் வந்திருந்தவராகிய மெஸ. எஸ. ஆர் கணபதிப்பிள்ளை மறுபடியுந் தமது உத்தியோகஸ்தானமாகிய தாப்பா பட்டினஞ் சேர்ந்து வேலையொப்புக்கொண்டுவிட்டனர்.

**தேகவியோகம். — Obituary.**—சுவாசப்பை ரோகத்தினால் சிலவாரங்களின்முன் இங்கிலந்திலிருந்து திரும்பிவந்தவராகிய மெஸ். றப்பேட் கோய்சிற்றன், 21ந்திகதி திங்கட்கிழமை காலஞ்சென்றனரென்னுந்துக்கசங்கதி யறிவிக்கின்றோம. இவர் தேசவழமைராச்சியத்தில் வித்தியாவெகுமதிபெற்று அரசாட்சியார்செலவில் இங்கிலந்துசென்று கல்விகற்றவர். மெஸ். குமாரகுலசிங்கம் நோய்வாய்ப்பட்டிருக்க அவரைப் பராமரித்தபோதே இவர்க்கும் நோய்தொற்றிற்று. அரசாட்சியார் ஓர் வைத்திய அம்மான்பொறுப்பில் யாழ்ப்பாணத்துக்கனுப்ப, அம்மானுந் தம்மாலாயவித்தையெல்லாம்பார்த்தும் நோய்மேற்கொண்டு மரணத்துக்கேதுவாயிற்று. கனம். கோய்சிற்றன் போதகரின் ஆண்மக்களிருவரும் பெண்மகளொருவரும் முன் காலஞ்சென்றுபோக, விசேஷ கல்வித்திறமைபொருந்தி வெகுமதிபெற்றுவிளங்கிய மூன்றாம்மகனும் வாலிபவயதிற் காலஞ்சென்றுபோனது ஆற்றொணாத்துயரைக் கொடுக்கின்றது. பரமசேயானின் இரகசியத்தை அறிவார்யார்? இவரின் மரணத்தைக் கவலையுற்றுப் புலம்பும் பெற்றோர் சகோதரர் சுற்றமித்திரரோடு நாமும் அனுதபிக்கின்றோம்.

கனம். அடம்ஸ் போதகரின் புத்திரியும், மட்டக்களப்புப்பகுதியில்வேலையாயிருக்கும் மெஸ. ம. சி. மெக்லெலன்உபதேசிகரின் அரிய மனைவியுமான மிஸிஸ் மெக்லெலன் அம்மாளும் சென்ற 7ந் திகதி காலஞ்சென்றனரென்னுந் துக்கசங்கதி கேள்விப்பட்டோம். இறந்தோர்க்காய்ப்புலம்புவோர்க்குக்கர்த்தரே ஆறுதலளிப்பவர்.

அராலிவடக்கில் எமோமியாஉபாத்தியாரின் சகோதரன் வேலுப்பிள்ளையின்மனைவி மரித்துவிட்டார்.

### Rev. Thomas Snell Smith.

Last week's mail brought us the tidings, more or less expected, of the home going of Mr. Smith who for nearly 27 years was a member of the American mission in Jaffna. Mr. Smith was born at Varany, Jan. 24th, 1845 when that place was occupied as a mission station. In 1856 he went to America in company with his parents, taking the long voyage in a sailing vessel round the Cape of Good Hope. He prepared for College in one of the Grammar schools and entered Amherst in June 1862. Graduating four years later, he taught a year in a preparatory school where his sons are now fitting for College. His theological course was taken in Andover Seminary in the days of the famous theologian, Dr. Parks. After leaving the Seminary in May 1869 he preached for a year or two in America, and then received his appointment as missionary of the A. B. C. F. M. On March 21st, 1871 he married Miss Emily M. Fairbank, daughter of Rev. Dr. Fairbank of the Mahratthi mission, India, and soon after with his wife sailed for Ceylon where they arrived in July of the same year.

For the first few months Mr. and Mrs. Smith were stationed at Urikardu where they could devote their whole time to the study of the language. On the departure of Rev. and Mrs. J.C. Smith (the parents of Mr. T.S. Smith) to the United States they moved up to Udupiddi where they remained about two years. In 1874 they were changed to Manepay where they were active in every Christian work, Mr. Smith superintending the Press and the Medical Class in addition to his other duties. In Jan. 1878 they went to Tellipallai where Mr. Smith took up with vigor what afterwards proved to be his principal work for Jaffna. For 20 years they labored in Tellipallai, Mr. Smith mainly in connection with the Training and Industrial schools and Mrs. Smith with the Bible Women, and both stamped their impress upon these two departments. During this time they went home but once,—from Jan. 1886 to Jan. 1888. In the year 1895 their eldest daughter Miss Mary, joined them at Tellipallai in order especially to relieve her mother of the education of the two boys. In March 1898 they all left for the home land, the parents expecting to return after a period of well earned rest.

On arriving in the United States, Mr. Smith found a home in Easthampton, Mass. and after settling the family started out in deputation work in the western part of the country. It was while he was going about from place to place that he became convinced that his liver was out of order and consulting with a local physician was referred to specialists in the East. On his return he went to two of the leading physicians of Boston who told him that he had cancer of the liver from which in all probability he could never recover. One doctor went so far as to say that in his opinion Mr. Smith could not live 6 months; he little knew the indomitable will of his patient. Hearing of a doctor in charge of a sanitarium who claimed that he could cure such diseases, Mr Smith put himself under his care, and for over two years fought courageously and hopefully against his malady. He was very sure that he was being helped and sanguine that he would soon be quite restored to health. For a time he made rapid improvement; the tumor was greatly reduced in size, and he felt much better in general health.

On June 29th of last year their second daughter, Miss Millie, was married, and though Mr. Smith was feeling poorly at the time, he nevertheless was able to perform the marriage ceremony. Not long after he began to fail again, became very weak, and finally succumbed on the 16th of December, aged 55 years and 11 months. A friend who visited him in his home but three days before his death writes,—"Mr. Smith expects to have the third operation performed (for dropsy) tomorrow. Mrs. Smith said that the doctors dreaded to do it as they feared he did not have strength to rally from the operation. I had only a few minutes talk with him. He looks very badly and realizes that his end is near. He has made such a fight for life." Later on came a postscript, "Mr. Smith is more comfortable since the operation." A letter mailed on the 18th, two days later, from the Rooms of the A. B. C. F. M. in Boston, says,—"Mr. Thos S. Smith has entered into his rest."

Thus passed away one who spent the best years of his life in Jaffna in working for the good of the Tamil people. He was not much over 55, and had his life been spared might have accomplished much more for the land of his birth. He was a very hard working missionary and one who under God did a great work for the Tamils of our peninsula. Almost at the commencement of his career as a missionary he became convinced of the importance of manual education, believing that it would go a long way towards impressing our young men with right views of labor. He threw himself heart and soul into schemes for industrial education. In the report of his first year's work at Tellipally he wrote:—"During the first term of the year 1878, the experiment was introduced of requiring all the pupils to spend one hour daily in manual labor of some sort. This was continued through the year with very satisfactory results."

From that time on he worked indefatigably for the interests of the school often incurring the displeasure of others in his zeal for the advancement of his plan. New buildings for the Training and Industrial schools were put up; an engine, a circular saw for cutting up logs, and sundry tools were gotten out from America; and other work started which he hoped to be able to complete on his return to Jaffna. He hoped also to collect funds for the endowment of the institution, and to get a new supply of necessary machinery; but his sickness prevented him from carrying out his intentions. He did succeed however in so impressing the Board with the importance of this work that they consented to send out Mr. and Mrs. Dickson to take his place at Tellipallai.

Nor was Mr. Smith less active in work among the churches. It would be a great mistake to think of him as interested only in his Training and Industrial schools. He took a broad view of mission work and interested himself in all departments of labor. It was largely due to his energy and help that three village churches were organized, North Erlarly, Varany and Nunavil; two others, South Erlarly and Atchuvaly, owe their organization partly at least to his efforts. In the erection of church buildings he took a prominent part, and several small chapels owe their existence to his example as a generous contributor, and to his activity in pushing the work through. The beautiful building erected for the Oodooville Girls Boarding school will long remain a monument to his success as a builder.

No missionary of modern times knew the American mission field better than Mr. Smith. He knew the people thoroughly and mingled with them in their homes, and while he sometimes pained his friends by his outspoken remarks he at the same time was sincere in his desire to help them in pointing out their mistakes. Hundreds will testify to his kind deeds and sympathetic words in times of distress and sorrow.

Mr. Smith was a man of strong opinions and had the courage of his convictions. He was liberal in his views, progressive in his policy, and optimistic in his hopes. His sanguine temperament sometimes led him to view affairs in too rosy a light; but no one who knew him ever became discouraged, or morbid in his presence. He will be greatly missed in every department of mission work, and we are poorer in "having one less in this world who knew the mission work of Jaffna."

Faithful to the work entrusted to him by his master, self-sacrificing and always ready to help others in their need, patient in suffering, he has gone home to his eternal rest. One cannot think of the past two years of patient suffering, and submission to God's will, without feeling a thrill of joy that such clear evidence of the Divine presence is vouchsafed the Christian. His submission to God's will was not the fatalism of the east. When told that he could not live long he did not fold his hands and piously exclaim, "It is the will of heaven;" but he fought bravely against the disease which had fastened itself upon him,—not refusing legitimate means for preserving his life yet willing to stop when His Master called him to come up higher. To the very last he spoke for Jaffna, he worked for Jaffna, he prayed for Jaffna, and the many young men who were his students at Tellipallai can do no better than to devote themselves as heartily and fully as he did to the salvation of their people. The Master calls away the workmen, but the work goes on.

Many will join us in expressing loving sympathy for Mrs. Smith and the six children, so sorely bereaved, praying that the God of the fatherless and widow will be with them to sustain and comfort.

---

### The Revised Code.

The very title makes one smile. It would be quite as appropriate to substitute the word *New* for *Revised* and call it Mr. Burrows' Code, as the old one was called Mr. Bruce's Code. The changes cannot be said to be few or unimportant, though, for the most part they must commend themselves to the educationalists of the Island; but we wish we might dare hope that now that we have practically a new Code, it might remain unchanged for two or three years at least. This constant amending makes it hard for Managers and teachers—they never know exactly where they stand. The New Code comes into effect this month, though amendments affecting the Schedules will not come into operation until July 1st. We propose to take up briefly some of the principal changes, and invite criticisms or remarks from those who feel so disposed.

#### English Education.

Here we have some changes in the Schedules that are radical, and which need to be tried before we can give them our unqualified approval. In the Reading of Standard I the Primer only is required, tho object lessons are also introduced. The First Book is assigned to Standard II, the Second to Standard III, and so on. Under Writing we have dictation from a First Book in the III Standard, from a Second Book in Standard IV &c. In Arithmetic the Code has gone more into detail than was done in previous Codes. The work in Standard II has been increased, and here it is that our teachers grumble most. English money, (pounds, shillings, pence and farthings only.) is introduced in Standard IV; fractions appear first in Standard V, the tables of weights and measures being continued; and the VI Standard finishes the tables and fractions with the exception of Recurring decimals which come in Stsndard VII. Grammar is introduced into the III rd standard, and Geography remains practically the same. With regard to Arithmetic it strikes us that the changes are good and will tend to add interest to the study of this subject. The amount required for the second standard seems too much. It should be remembered that children enter school at 4 and 5 years of age, and are only 6 and 7 when they go up for the examination of the II Standard. The time for getting certificated teachers in our English schools has been extended one year; "from January 1 st 1903 at least half of the teachers must possess certificates in order to earn the enhanced grants." Then as to

#### Training Schools

the changes are important. "The examination for admission will be held in September hereafter instead of in November and pupil teachers who have passed their third-year examination and are desirous of entering a training school will not be required to pass this examination." At the end of the first year Rs. 100, and at the end of the second year Rs 150 will be paid to boys passing the examination, the number being limited to 10 per cent of the aided boys' and mixed school under the management to which the training school belongs. This is more liberal than in the old Code. The terms for girls are even more liberal. Rs.125 for a pass at the end of the first year and Rs. 175 for one at the end of the second year and a number allowed amounting to 15 per cent of the girls' schools, is surely cause for rejoicing. It remains to be seen however whether the clause requiring a bond will not interfere, as we fear it will, with managers securing children for the Training schools. As for

#### Industrial Schools

the Director evidently is drawing the lines closer. The insertion of (d) in clause 14 which reads "That the trade or trades taught to the boys are such as they are likely to be able to follow after leaving school" may be made the innocent cause of doing these schools a great injustice, for it seems to us that the Director forgets that in a country like Ceylon, the very fact that boys of good caste can be taught a trade even though they may not follow it after leaving school, is a great gain and should not be undervalued.

#### Specific Subjects.

Only two of these subjects can be taken in Standard VI; but three in Standard VII and VIII For a pass in English literature a higher rate will be paid. Five subjects and five only will be allowed for one who has passed the VIIIth Standard and takes what may be called a post-graduate course. From January 1st, 1901 "Drawing" will be struck out from Schedule C and be introduced into the ordinary Standard schedules. These changes are on the whole advantageous. (To be continued.)

---

Printed at the Press of Strong and Asbury Manippay
Published by A. C. Mission and Thambyah Strong Cooke